

சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் இன்று (16.02.2017) நடைபெற்ற மருத்துவ முகாமினை மேலாண்மை இயக்குநர் திரு.வி.அருண்ராய், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து கண் பரிசோதனையும் செய்து கொண்டார்கள்.

**செய்திவெளியீடு எண்.10/2017** **நாள்: 16.02.2017**

# சென்னைக் குடிநீர் வாரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மருத்துவ முகாம்

-----

சென்னைக் குடிநீர் வாரிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான மருத்துவ முகாம் இன்று (16.02.2017) சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

அப்பல்லோ மருத்துவமனையைச் சார்ந்த மருத்துவர்கள் குழுவினரைக் கொண்டு நடைபெற்ற இந்த மருத்துவ முகாமினை சென்னைக் குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.வி. அருண்ராய், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலகம் மட்டுமல்லாது அனைத்து பகுதி அலுவலகங்களிலுள்ள அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பயன்பெறத் தக்க வகையில் அந்தந்த பகுதி அலுவலகங்களில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் இந்த முகாமினை தொடர்ந்து நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த முகாமின்போது பணியாளர்களுக்கு இரத்த அடர்த்தி பரிசோதனை, இருதய பரிசோதனை, நுரையீரல் பரிசோதனை, எலும்பு மற்றும் மூட்டு பரிசோதனை, நரம்பியல் பரிசோதனை, காது மூக்கு தொண்டை தொடர்பான பரிசோதனைகள், கண் பரிசோதனை மற்றும் பெண்கள் நல மருத்துவம் தொடர்பான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த முகாமில் அப்பல்லோ மருத்துவமனையைச் சார்ந்த பொது நல மருத்துவர்கள்Dr. ஜோஷ்வா பிரௌன், Dr. அசுதோஷ், இருதய மருத்துவர் Dr. ஸ்ரீவட்சன், மகளிர் நல மருத்துவர் Dr.ஸ்டெர்லினா, காது மூக்கு மற்றும் தொண்டை மருத்துவர் Dr. அன்புக்கரசி, எலும்பு மற்றும்

மூட்டு மருத்துவர் Dr. குணால் பட்டேல், நரம்பியல் மருத்துவர் Dr. வேதநாயகம் ஆகிய மருத்துவர்களால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மருத்துவ முகாமிற்கான ஏற்பாடுகளை மருத்துவ முகாம் ஒருங்கிணைப்பாளர் திரு. ஜெ. தனுஷ்கோடி அவர்களும் சென்னைக் குடிநீர் வாரிய தலைமை அலுவலக மருத்துவர் R.நிவேதிதா அவர்களும் பொதுமேலாளர் திரு.வ. முருகேசன் அவர்களும் செய்திருந்தனர்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்